செய்தி வெளியீடு எண் : 2353 நாள் : 25.12.2022

# கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியாவில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.229.83 கோடி மதிப்பிலான 1115 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.790.41 கோடி மதிப்பீட்டிலான 5,936 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25,042 பயனாளிகளுக்கு, ரூ.368.20 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வளாகத்தில் இன்று (25.12.2022) நடைபெற்ற அரசு விழாவில் ரூ.229.83 கோடி மதிப்பிலான 1115 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.790.41 கோடி மதிப்பீட்டிலான 5936 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25,042 பயனாளிகளுக்கு, ரூ.368.20 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.நடராஜன்(கோயம்புத்தூர்), திரு.கு.சண்முகசுந்தரம் (பொள்ளாச்சி) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., சிறப்பு செயலாக்கத்திட்டத்தின் அரசு சிறப்புச் செயலர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மரு.கா.ப.கார்த்திக்கேயன் இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம், செயல் இயக்குநர் பி.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., மேற்கு மண்டல காவல் துறைத்தலைவர் திரு. ஆர்.சுதாகர் இ.கா.ப., மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனாஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் திரு.மு.பிரதாப் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப்பி.எஸ்.லீலா அலெக்ஸ், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) டாக்டர்.அலர்மேல்மங்கை இ.ஆ.ப., மாநகராட்சி துணை மேயர் திரு.இரா.வெற்றிச்செல்வன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.183.21 கோடி மதிப்பீட்டில், 124 பணிகள், பேரூராட்சிகள் துறையின் சார்பில் ரூ.28.40 கோடி மதிப்பீட்டிலான 854 பணிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.6.40கோடி மதிப்பீட்டில் 66 பணிகள், தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.5.50கோடி மதிப்பீட்டிலான 64 பணிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூ.3கோடி மதிப்பீட்டிலான 2 பணிகள், நீர்வள ஆதாரத்துறை சார்பில் ரூ.2.67 கோடி மதிப்பீட்டிலான 1 பணி, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான 1 பணி, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை சார்பில் 03 பணிகள் எனமொத்தம் ரூ.229.83 கோடி மதிப்பீட்டிலான 1115 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ623.34கோடி மதிப்பீட்டிலான 214 பணிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.74.15 கோடி மதிப்பீட்டிலான 5436 பணிகள், கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் ரூ.64.84 கோடி மதிப்பீட்டிலான 250 பணிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூ.14.73 கோடி மதிப்பீட்டிலான 1 பணி, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ.7.கோடி மதிப்பீட்டிலான1 பணி, பேரூராட்சிகள் துறை சார்பில் ரூ6.37கோடி மதிப்பீட்டிலான 34 பணிகள் என மொத்தம் ரூ.790.41 கோடி மதிப்பீட்டிலான 5936 பணிகளுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கோயம்புத்தூர் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் ரூ.252.22 கோடி மதிப்பீட்டில் 1,868 பயனாளிகளுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.46.07கோடி மதிப்பீட்டில் 3934 பயனாளிகளுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.18.86 கோடி மதிப்பீட்டில் 3893 பயனாளிகளுக்கும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் ரூ11.93கோடி மதிப்பீட்டில் 71 பயனாளிகளுக்கும், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் சார்பில் ரூ.10.65 கோடி மதிப்பீட்டில் 3265 பயனாளிகளுக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் ரூ.6.77 கோடி மதிப்பீட்டில் 6412 பயனாளிகளுக்கும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ரூ.5.78 கோடி மதிப்பீட்டில் 2084 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.5.62கோடி மதிப்பீட்டில் 77 பயனாளிகளுக்கும், வேளாண் பொறியியல் துறை சார்பில் ரூ.2.76 கோடி

மதிப்பீட்டில் 122 பயனாளிகளுக்கும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.2.08கோடி மதிப்பீட்டில் 200 பயனாளிகளுக்கும், கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் ரூ.1.08கோடி மதிப்பீட்டில் 645 பயனாளிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ.1.02கோடி மதிப்பீட்டில் 234 பயனாளிகளுக்கும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு பிரிவின் சார்பில் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டிலும், 28 பயனாளிகளுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் ரூ.65.14 இலட்சம் மதிப்பீட்டில் 500 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத்துறை சார்பில் ரூ.46.42 இலட்சம் மதிப்பீட்டில் 188 பயனாளிகளுக்கும்,

பேரூராட்சித்துறை சார்பில் ரூ.45.30 இலட்சம் மதிப்பீட்டில் 3 பயனாளிகளுக்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் ரூ33.10 இலட்சம் மதிப்பீட்டில் 16 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் சார்பில் ரூ.26.52 இலட்சம் மதிப்பீட்டில் 211 பயனாளிகளுக்கும், தொழிலாளர் நலத்துறை சார்பில் ரூ.13இலட்சம் மதிப்பீட்டில் 700 பயனாளிகளுக்கும், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் ரூ.7.91 இலட்சம் மதிப்பீட்டில் 241 பயனாளிகளுக்கும், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் ரூ.5இலட்சம் மதிப்பீட்டில் 24 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் 24 பயனாளிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 218 பயனாளிகளுக்கும், தொழிலாளர்களின் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் 60 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் சார்பில் 14 பயனாளிகளுக்கும், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கும், என மொத்தம் 25,042 பயனாளிகளுக்கு ரூ.368.20 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற இவ்விழாவில் 25,042 பயனாளிகளுக்கு, ரூ.368.20 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்குத்துறை அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களை

நேரடியாக சந்தித்து, பொதுமக்களிடருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். மனுக்களின் விவரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். மேலும், இதுவரை 157575 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மக்களின் புகார்களை உடனுக்குடன் பெற்று, அவற்றின் மீது தீர்வு காணும் வகையில், 24 மணிநேரமும் இயங்கும் கட்டுபாட்டு மையத்தை திறந்து வைத்து, பொதுமக்களின் குறைகள் கேட்டறியபட்டு, தீர்வு காணப்பட்டு வருகிறது. மின்னகம் சேவை மையத்தின் மூலம் 24.12.2022 வரை 13,37,679புகார்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 13,29,565 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. சுமார் 99சதவீதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

கடந்த 10ஆண்டு காலங்களில் 2.20இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒன்றரை ஆண்டுகால ஆட்சியில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு கட்டணமில்லா மின் இணைப்பு வழங்கி சாதனை செய்யப்பட்டுள்ளது. மேலும், 316 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மிககுறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை ஏற்பாடு செய்த மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்குத்துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசுத்துறை அலுவலர்களுக்கும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 70 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, சுமார் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 128 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25,123 பயனாளிகளுக்கு 650 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், 24.8.2022 அன்று ஈச்சனாரியில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.27,200 கோடி செலவில் 228 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.662.50 கோடி மதிப்பீட்டிலான 748 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,07,410

பயனாளிகளுக்கு ரூ.600 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தற்போது இன்று நடைபெற்ற இந்த அரசு விழாவில் ரூ.229.83 கோடி செலவில் 1115 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.790.41 கோடி மதிப்பீட்டிலான 5936 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25,042 பயனாளிகளுக்கு, ரூ.368.20 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

எனமொத்தம் மூன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மூலமாக ரூ.1089 கோடி செலவில் 1413 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, ரூ.1540 கோடி மதப்பீட்டிலான 6800 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சுமார் 1,60,000 பயனாளிகளுக்கு, ரூ.1600 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி தமிழ்நாட்டிலே அதிக அரசு நலத்திட்ட உதவிகள் பெற்ற முதல் மாவட்டமாக கோயம்புத்தூர் மாவட்டம் விளங்கி வருகிறது.

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அரசின் சாதனைகள் சில ,**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் சுமார் 1,70,000 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 1,63,000 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. 1200 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மகளிர் திட்டத்தின் மூலம் 2,452 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான ரூ.63 கோடி மதிப்பிலான கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. 13,885 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.8.62. கோடி வங்கி கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது. மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த சுமார் 510 பெண்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

கூட்டுறவு வங்கிகளில் 5 பவுனுக்குட்பட்ட நகைக்கடன் ரத்துத்திட்டத்தின் மூலம் சுமார் 42,000 நபர்களுக்கு ரூ.200 கோடி தங்க நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர். பல்வேறு கடன் உதவித்திட்டத்தின் கீழ் 3,48,000 நபர்களுக்கு ரூ.3300 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சாலைபணிகளுக்கு ரூ.230 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கோயம்புத்தூர் மாநகரத்திற்கு மேற்கு சுற்று வட்டச்சாலை அமைக்க நில எடுப்புக்காக ரூ.104.44 கோடி இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. விமான நிலைய விரிவாக்க பணிகளுக்கு ரூ.1084 கோடி இழப்பீட்டுத்தொகை நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 10,30,296 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.4,000 வீதம் கொரோனா நிவாரணமாக ரூ.412.07 கோடி வழங்கப்பட்டுள்ளன.

மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 27,76,436 பயனாளிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, 1,75,898 நபர்களுக்கு இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சிறுநீரக செயலிழப்பு மற்றும் புற்றுநோய் ஆகிய தொற்றா நோய்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இலவச மின்சார திட்டத்தின் கீழ் 11866 விவசாயிகளுக்கு ரூ.38.9 கோடி மதிப்பீட்டில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.13.58 இலட்சம் மதிப்பீட்டில் 60 விசைத்தறி மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இன்றைய தினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் ரூ.6.55கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுபாதை அமைத்தல் மற்றும் ரூ.65.15இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற 6 மாதங்களில் இந்தியாவில் எடுக்கப்பட்ட சர்வே ஒன்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர் என்று அறிவித்தது. இதற்கு நம் முதலமைச்சர் அவர்களிடம் கருத்து கேட்டபோது இந்தியாவில் நம்பர் 1 முதலமைச்சர் என்று கூறுவது எனக்கு பெருமையல்ல, இந்தியாவில் நம்பர் 1 மாநிலமாக நம்மமாநிலம் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய இலக்கு என்று கூறினார்.

இந்தியாடூடே நாளிதழ் வெளியிட்டுள்ள சர்வேயில் இந்தியாவிலே தமிழ்நாடு மாநிலம் நம்பர் 1 மாநிலமாக உள்ளதாக தெரிவித்துள்ளது. விளையாட்டு நலத்துறைகளின் சார்பில் உங்கள் தொகுதியில் எந்த கோரிக்கையாக இருந்தாலும் என்னை சந்தித்து தெரிவிக்கலாம்.

அக்கோரிக்கைகள் மீது தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்டச் செயலாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in